# திருவரங்கத்தைப் பற்றி. . .

"துருவன்"

● திரு அரங்கம். எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம் என்ற பொருள் உடையது. ஸ்ரீ வைஷ்ணவர்கள் இந்த திவ்ய தேசத்தை கோயில் என்றே அழைப்பர்.

● ஸ்ரீ வைஷ்ணவர்களால் "பூலோக வைகுண்டம்" என்று கொண்டாடப்படும் ஸ்ரீரங்கம் தமிழகத்தில் திருச்சி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து (பஸ் நிலையத்திலிருந்தும்) இரண்டு மைல் தூரத்தில் உள்ளது

● சங்க இலக்கியங்களில் பாடப் பெற்றிருப்பதனாலும் சேர, சோழ, பாண்டியர்களும், விஜய நகர நாயக்க மன்னர்களும் இத்தலத்தே பல பல கைங்கர்யங்களை செய்துள்ளதாக பல கல் வெட்டுக்கள் காண்கின்ற படியாலும் இக்கோயில் கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகளுக்கும் முற்பட்டது என்பது சரித்திரவாசிரி யர்கள் கருத்து.

● எல்லா திவ்ய தேசங்களுக்கும் வேர்ப்பற்று திருவரங் கமே. 'தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கம்" என்றார் பெரியாழ்வாரும்

● ஆழ்வார்கள் பதின்மரும் ஆண்டாளும் பாடிய ஏற்றம் பெற்ற தலம் இஃதொன்றே.

● 'மேல் வீடு' என்றும் "போக மண்டபம்" என்றும் கொண்டாடப்படும் இத்திருவரங்கத்து எம்பெருமான் திருவடி களிலே ஆண்டாளும், திருப்பாணாழ்வாரும் மறைந்த பெருமையை உடையது.

● ஸ்ரீராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் ஆனவுடன் ஒவ் வொருவருக்கும் ஒவ்வொரு பரிசளித்தான். ஸ்ரீ விபீஷணாழ் வானுக்கு தான் ஆராதித்து வந்த எம்பெருமானையே பரிசாக அளித்தான். அவனும் அவ்வெம்பெருமானை எழுந்தருளப்

பண்ணிக் கொண்டு இலங்கைக்குப் போகும் வழியில்,—ஸ்ரீரங்கத்தில், இரண்டு காவேரி மத்யத்தில் ரம்யமான சூழ்நிலையைக் கண்டு அங்கேயே எழுந்தருளியிருக்க விருப்பம் கொண்டு விபீஷணனுக்குத் தெரிவிக்க அவனும் அதற்கு சம்மதித்து அவரை அங்கேயே விட்டுச் சென்றனன் என்பது ஐதிஹ்யம்.

● அதனால்தான் அரங்கநாதன் தெற்கு நோக்கிப் பள்ளி கொண்டிருக்கிறான். ''மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசை நோக்கி மலர் கண் வைத்த என்னுடைய திருவரங்கர்'' என்றார் பெரியாழ்வாரும்.

● மூலமூர்த்தி ஸ்ரீரங்கநாதன் என்றும் பெரிய பெருமாள் என்றும் குறிப்பிடப்படுகிறார். சயன திருக்கோலம். ''குடதிசை முடியை வைத்து குணதிசை பாதம் நீட்டி வடதிசை பின்பு காட்டி தென்திசை இலங்கை நோக்கி...'' என்பர் தொண்டரடிப் பொடியாழ்வார்.

● உத்ஸவர் நம்பெருமாள் என்றும் அழகிய மணவாளன் என்றும் குறிப்பிடப்படுகிறார். மூலவர் இரண்டு புஜங்களுடனும் உத்ஸவர் நான்கு புஜங்களுடனும் எழுந்தருளியிருக்கிறார்.

● இது பற்றி வேடிக்கையாக ஒரு ஐதிஹ்யமுண்டு. ஒரு சமயம், பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் பகவானுக்கு இரண்டு கைகளா நான்கு கைகளா என்ற சந்தேகம் சிலருக்கு வந்ததாம். அவர்கள் பட்டரைக் கேட்க அவர் ''அதனாலென்ன? இரண்டு கைகள் உடையவனாயிருந்தால் பெரிய பெருமாள் என்று நினையுங்கள்; நான்கு கைகள் உடையவனாய் இருந்தால் நம்பெருமாள் என்று கொள்ளுங்கள்'' என்றாராம்.

● ப்ரணவாகார விமானத்தினடியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைச் சுற்றி ஏழு மதில்களும் — திருவீதிகளும் உள்ளன. 'மாடமாளிகை சூழ் திருவீதியும் மன்னுசேர் திருவிக்கிரமன் வீதியும், குலசேகர மகேந்திரன் வீதியும், ஆலிநாடன் அமர்ந்துறை வீதியும், கூடல்வாழ் குலசேகரன் வீதியும், தேடரிய தர்மவர்மாவின் வீதியும் தென்னரங்கன் திருவாரணமே''

என்று ஏழு ப்ராகாரங்களைத் தாண்டி உள்ளே செல்வோமானால் இரண்டு திருமணத் தூண்களுக்கிடையில் ஸ்ரீரங்கநாதன் எழுந்தருளியிருக்கிறான்.

● பலவாண்டுகள் உத்ஸவமூர்த்தி கோயிலிலே இருக்க முடியாமல் பல பல உபத்ரவங்கள் ஏற்பட்டன. வெளியிடங்கள் பலவற்றில் தங்கி, பலவாண்டுகள் கழித்து உத்ஸவமூர்த்தி பழைய படியே கோயிலுக்கு எழுந்தருளினார். இவர்தான் ஸ்ரீரங்கநாதன் என்று அறுதியிட அங்கே யாரும் இல்லை. பெரியோர்கள் பலர் பரமபதித்து விட்டனர். அப்போது ஓர் ஸ்ரீவைஷ்ணவ வண்ணான் உத்ஸவ மூர்த்தியை திருமஞ்சனமாட்டி, அவர் ஈரவாடைத் தீர்த்தத்தை உட்கொண்டு ''நம் பெருமாள்'' என்று அழைத்தான். அதுவே இவருக்கு நிலைநின்ற பேராயிற்று.

● எத்தலத்து அவதரித்த ஆசார்யரும் இத்தலத்தே வாழ்ந்திருந்து ஸ்ரீவைஷ்ணவ சமயத்தை நிர்வஹித்தது சரித்திரப்ரஸித்தம். ஸ்ரீமந் நாதமுனிகள், ஆளவந்தார், ராமானுசர், நம்பிள்ளை, பிள்ளை லோகாசாரியார், மணவாளமாமுனிகள் ஆகிய அனைவரும் நம் தர்சன நிர்வாஹம் பண்ணியது இத்தலத்தே.

● கோயிலினுள் ஸூர்ய புஷ்கரிணி என்றும் சந்த்ர புஷ்கரிணி என்றும் இரண்டு புஷ்கரிணிகள் உள்ளன. சந்திர புஷ்கரிணிக் கரையில் ஸ்தல வ்ருக்ஷமான புன்னை மரம் ஒன்று உள்ளது. இதனடியில் நம் முன்னோர்கள் திருவாய்மொழி பாடி, வ்யாக்யானங்களை ஆராய்ந்தனுபவிப்பார்கள் என்பது ப்ரஸித்தம்.

● நம்பெருமாளும் தனிக்கோயில் நாச்சியாரான ஸ்ரீரங்க நாச்சியாரும் திவ்ய தம்பதிகளாய் பங்குனி உத்தரநாளில் சேர்ந்த சேர்த்தியில் ஸ்வாமி எம்பெருமானார் நமக்காக சரணாகதி செய்தது இத்தலத்தே.

● ஜகதாசார்யரான ஸ்வாமி எம்பெருமானாரை மிகவும் உகந்து பெருமாள் அவர் தூய பூத உடலை கோயிலுக்குள்ளேயே வஸந்த மண்டபத்திலே திருப்பள்ளிப்படுத்தி எழுந்தருளியிருக்கச் செய்தான். இவ்விடமே உடையவர் ஸந்நிதியாகும். இங்குள்ள எம்பெருமானார் திருமேனி ''தானான திருமேனி'' எனப்படுகிறது.

● நம்பெருமாளுக்கு மணவாள மாமுனிகள் ஆசார்யனு யிருந்து ஓராண்டு பகவத் விஷய (திருவாய் மொழி) காலக்ஷேபம் பண்ணியதும், சாற்றுமுறை தினத்தன்று நம்பெருமாளே 'ஸ்ரீசைல தயாபாத்ரம்' என்கிற தனியனை தன்னுடைய ஆசார்யனுக்கு ஸமர்ப்பித்ததும், அதற்காக இன்றைக்கும் ஸ்ரீசைலேச வைபவ உத்ஸவம் மாமுனிகள் ஸன்னிதியில் நடைபெறுவதும் இத்தலத்து விசேஷம்.

● நம் பெருமான் தன் ஆசார்யரான மணவாள மாமுனிகள் பரமபதித்த தினமான மாசி மாதம் க்ருஷ்ண பக்ஷ த்வாதசியில் இன்றைக்கும் திருவத்யயனம் நடத்திவைப்பது இத்தலத்தே பரம விசேஷமாகும்.

● உத்ஸவங்கள்: தை மாதம் பூபதித் திருநாள்-பெருமாள் நாச்சிமார் இருவருடன் திருத்தேர் உத்ஸவம் கண்டருள்வது இவ்வுத்ஸவம் 9ம் நாளன்று. இது ஸ்ரீராமன் நடத்தி வைத்த உத்ஸவம். பங்குனி மாதம் ஆதிப்ரஹ்மோத்ஸவம் இவ்வுத் ஸவத்தில் 9ம் நாள் ஸ்ரீரங்க நாச்சியாருடன் ஒரே சிம்மாசனத்தில் திருமஞ்சன உத்ஸவம் கண்டருள்வது விசேஷம். இவ்வுத்ஸவம் பிரமன் நடத்தி வைத்த உத்ஸவம். சித்திரை மாதம் விருப்பன் உடையார் நடத்தி வைத்த விருப்பன் திருநாள். ஆக தை, பங்குனி, சித்திரை உத்ஸவங்களில் த்வஜாரோஹண ரதோத்ஸ வங்கள் உள்ளன. இக் கோயில் பாஞ்ச ராத்ரம்.

● நம்மாழ்வார் தொடக்கமான ஆழ்வார்கள் அருளிய செந்தமிழ் மறையாம் அருளிச் செயல்களைக் கேட்டு ஆனந்திப்பதற் காகவே ப்ரதி வருஷமும் கார்த்தி-மார்கழி மாதங்களில் திரு மொழித்திருநாள் திருவாய்மொழித்திருநாள், என்று திருவத்யய னோத்ஸவம் கண்டருள்வது இத்தலத்தே பிரஸித்தம்.

● ஆழ்வார் திருநகரி நம்மாழ்வார் ப்ரதிவருஷம் அத்யய னோத்ஸவத்துக்கு ஸ்ரீரங்கம் எழுந்தருளி உத்ஸவம் முடிந்த பிறகு ஆழ்வார்—திருநகரி எழுந்தருள்வது நடந்த கதையாகும். பிற் காலத்தில் ஏற்பட்ட முஸ்லீம்களின் படையெடுப்பு, ஆற்காட்டுப் போர்கள் ஆகிய கலாபங்களினால் இது நின்றுவிட்டது.

● இப்போதும் அத்யயனோத்ஸவத்தில் நடைபெறும் அரையர் ஸேவையும், அரையர் அபிநயமும் வ்யாக்யானமும் கண்ணுக்கும் காதுக்கும் பெரு விருந்தாகும்.

● இத்தலத்தில் லோகப்ரபலமான உத்ஸவம் வைகுண்ட ஏகாதசியாகும். அன்றைக்கு லக்ஷக்கணக்கான மக்கள்திரள் எம்பெருமானைத் தரிசிக்க அலைமோதுவதை இன்றைக்கும் ஸ்ரீரங்கத்தில் காணலாம். அன்றைய தினம் பெரிய பெருமாளுக்கு முத்தங்கியும் நம்பெருமாளுக்கு வஜ்ராங்கியும் சாத்தப்படுகிறது. அந்த ஸேவையை கண்ணாரக் காண்பவர்கள் ''ஆபரணத்துக்கு அழகு செய்யும் பெருமாள்'' என்ற விருது ஸ்ரீரங்கநாதனுக்கே தரும் என்பர்.

● கோயில் — பெரிய கோயில்; பெருமாள் பெரிய பெருமாள்; பிராட்டி—பெரிய பிராட்டியார்; பெண் கொடுத்த ஆழ்வார — பெரியாழ்வார்; மண்டபம் — பெரிய திருமண்டபம்; திருநாள் — பெரிய திருநாள்; பெரிய திருப்பாவாடை; ஆசார்யராம் ஜீயர் — பெரிய ஜீயர்; இப்படிப்பட்ட பெரிய பெரிய பெருமைகள் பெற்றது இத்தலம்.

● கவிச்சக்ரவர்த்தி கம்பர் தம் இராமாயண காவியத்தை அரங்கேற்றியது இத்தலத்தே தாயார் ஸன்னிதிக்கு எதிரேயுள்ள மண்டபத்திலாகும்.

● எத்தலத்தில் வாழும் ஸ்ரீவைஷ்ணவனும் ''ஸ்ரீரங்கச்ரியம் அநுபத்ரவாம் அநுதிநம் ஸம்வர்த்தய'' (ஸ்ரீரங்கத்தின் செல்வமானது உபத்ரவமில்லாமல் ஒவ்வொரு நாளும் வளரட்டும்) என்றும் ''அடியார்கள வாழ அரங்க நகர் வாழ'' என்றும் திருவரங்கத்துக் பல்லாண்டு பாடுவது கொண்டே இந்தலத்தின் பெருமை அறியலாம். நாமும் அவ்வாறே வாழ்த்துவோம்.